# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 07 /2025 |
| Deposition of witness | : | P.W. – 5 |
| Name | : | மோகன்ராம் |
| Father's /Husband Name | : | ராஜேந்திரன் |
| Village | : | திண்டுக்கல் |
| Taluk | : | திண்டுக்கல் |
| Age | : | 30 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day October, 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது திண்டுக்கல் அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2024–ம் தேதி மதியம் 12.15 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் நான் பணியில் இருந்தபோது 63 வயது மதிக்கத்தக்க தனம் என்பவரை அவரது மகள் சரண்யா என்பவர் மூலம் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது அன்று காலை 10.00 மணியளவில் அவரது வீட்டு அருகே வைத்து தெரிந்த ஒரு நபரால் மண்வெட்டியால் தாக்கியதில் காயம் ஏற்பட்டதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவரது தலையில் ஆழமான 7 X 3 X 3 செ.மீ அளவிலான ஒரு வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி நபருக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

மேலும், அதே நாள் மதியம் 12.50 மணியளவில் 63 வயது மதிக்கத்தக்க ரவி என்பவர் அவரது உறவினர் சுப்ரமணி என்பவர் மூலம் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது அன்று காலை 09.30 மணியளவில் தெரிந்த மூன்று நபர்கள் அவரது வீட்டு அருகே வைத்து மரக்கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதித்தபோது சுயநினைவுடன் இருந்தார். அவரது இடது கையில் 5 X 1 X 1 செ.மீ அளவிலான ஒரு சிராய்ப்பு காயம் இருந்தது. அவரது இடது கையில் 5 X 2 X 1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயமும் இருந்தது. மேலும், அவரது முன் தலையில் 2 x 1 செ.மீ அளவிலான ஒரு சிராய்ப்பு காயமும் இருந்தது. அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்து உள்நோயாளியாக

அனுமதித்தேன். மேற்படி நபருக்கான விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் தாக்கப்பட்டிருந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-**

மேற்படி சாட்சியான மருத்துவர் திண்டுக்கலிலிருந்து இன்று நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்திருந்தபோதிலும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறியதால் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படமலேயே விசாரணை முடிக்கப்பட்டது.

M S
BHARATHIDHASAN

Digitally signed by
M S
BHARATHIDHASAN
Date: 2025.10.30
09:56:03 +0530